**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.**

**OS.No - 31/2024**

Date: 19.11.2025 PW. 1 (சிவானந்தம்)

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். நான் எவ்வளவு விவசாய நிலங்கள் உள்ளது என்றால் சுமார் 4 ஏக்கர் நிலங்கள் உள்ளது. நான் பிரதிவாதிகளுக்கு ரூ.14,40,000/- காசோலை மூலம் கொடுத்தேன் என்பவதற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பல்வேறு தவணைகளில் ரூ.15,60,000/- நான் பிரதிவாதிகளுக்கு கொடுத்ததாக சொல்வதில் எந்தநெ்த தேதியில் யார் யாரிடம் எவ்வளவு பணம் கொடுத்துள்ளேன் என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எந்த பிரதிவாதிக்கு எந்தெந்த தேதியில் எவ்வளவு பணம் கொடுத்தேன் என்பதை குறிப்பிட்டு எனது பிராதிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் செலுத்தி வருகிறேன். 2020-2021-ம் ஆண்டிற்கான என்னுடைய வருமானவரி கணக்கில் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொகை ரூ.25,00,000/-யை பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்ததாக காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். மேற்படி வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் மேற்படி ரூ.25,00,000/-யை என் வருமானவரி கணக்கில் காட்டவில்லை என்றும், அதனால் தான் அந்த ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 புரோ நோட்டில் பிரதிவாதிகளின் கையொப்பம் புளு கலரிலும், அதில் எழுதப்பட்டுள்ள மற்ற விவரங்கள் கருப்பு கலர் மையினாலும் எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 புரோ நோட்டை யார் பூர்த்தி செய்தார்கள் என்றால் சுப்பிரமணி என்பவர் அதில் எழுதி பூர்த்தி செய்தார். நான் தாவா புரோ நோட்டில் கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் போடவில்லை. நான் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு Door Closed என்று திரும்பி வந்துவிட்டது என்றால் சரிதான்.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.11.12 16:12:22 +0530

நான் எனது பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் பிரதிவாதிகள் வேண்டுமென்றே அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அம்மா கல்யாணி என்பவரின் வங்கி கணக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என் தாயாரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் விசாரிக்கபோவதில்லை. அவருக்கும் இந்த வரவு, செலவிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. வா.சா.ஆ.1 புரோ நோட்டில் பிரதிவாதிகளிடம் எத்தனை கையொப்பம் வாங்கியுள்ளேன் என்றால் ஒவ்வொரு பிரதிவாதியிடமும் இரண்டு கையொப்பம் வாங்கியுள்ளேன். எந்ததெந்த தேதியில் நான் அவர்களிடம் கைெயெழுத்து வாங்கினேன் என்றால் 28.10.2020-ம் தேதி அவர்களே தான் கையெழுத்து போட்டார்கள். புரோ நோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதிகளுடையது அல்ல என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை என்றும் சொல்லியுள்ளார்கள், ஆமாம் என்றும் சொல்லியுள்ளார்கள். புரோ நோட்டில் உள்ள கையொப்பம் தான் பிரதிவாதிகளுடைய கையொப்பம் என்று நிரூபிக்க நீதிமன்றம் மூலம் நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. புரோ நோட் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் நடுவிக்கோட்டை கிராமத்தில் உள்ள எங்கள் வீட்டில் வைத்து பிரதிவாதிகள் தான் எழுதிக்கொடுத்தார்கள். எனக்கு ரூ.25,00,000/- பணம் கடனாக கொடுக்க வசதி இல்லை என்றும், அவ்வாறு வசதி இருந்திருந்தால் வருமானவரி கணக்கில் காண்பித்திருப்பேன் என்றும், அதனால் நான் பிரதிவாதிகளுக்கு எந்தவித தொகையும், எந்தவித பணமும் கடனாக கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. புரோ நோட் எழுதியதற்கு எவ்வளவு காலத்திற்கு முன்பிருந்து பிரதிவாதிகளுக்கு நான் கடன் கொடுத்தேன் என்றால் 2016-ம் வருடத்திலிருந்து பிரதிவாதிகளுக்கு நான் கடன் கொடுத்து வந்தேன். சுமார் எத்தனை முறை பணம் கொடுத்திருப்பேன் என்றால் 10,15 முறை பணம் கொடுத்திருப்பேன். நான் பிரதிவாதிகளுக்கு எந்தெந்த தேதியில எவ்வளவு பணம் கொடுத்தேன் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது. புரோ நோட் எழுதிவாங்குவதற்கு முன்பு கடைசியாக எப்போது எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. காசோலை

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.11.12 16:12:29 +0530

மூலம் தான் கடைசியாக பணம் கொடுத்தேன். ஆனால், எப்போது என்று ஞாபகமில்லை. நான் பிரதிவாதிகளுக்கு பலமுறை பணம் கொடுத்த சமயத்தில் நான் தனியாக இருந்து கொடுத்தேனா அல்லது என்னுடன் யாராவது இருந்தார்களா என்றால் என்னுடன் சில பேர் இருந்தனர். நான் எந்த பணமும் பிரதிவாதிகளுக்கு கொடுக்கவில்லை என்றும், யார் முன்னிலையிலும் கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு கொடுத்திருந்தால் எந்த தேதியில் எவ்வளவு பணம் கொடுத்தேன் என்று எழுதி வைத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. கடன் கொடுத்த 3 வருட காலம் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்பதால் கால கெடுவால் இந்த வழக்கு பாதிப்படைகிறது என்றும், நான் கோரியவாறு இந்த பணத்தை திரும்ப பெற எனக்கு அருகதை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.11.12 16:12:35 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**